RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1133

OPEN ACCESS

# ஒப்பீட்டு நோக்கில் பாரதியும் விவேகானந்தரும்

வே. தேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Bharthi and Vivekananda in Comparative Perspective

V. Devi [a, *]

[a] Department of Tamil, Queen Mary's College (Autonomous), Chennai–600005, Tamil Nadu, India

* Corresponding Author: devibatamil@gmail.com

Received: 03-08-2021
Revised: 20-07-2022
Accepted: 26-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

A comparison is a way of expressing that one leadership trait is similar to and compatible with another leadership trait. Therefore, Bharathiyar and Vivekananda are united in their thoughts, actions, faith, patriotism, particularly Tamil patriotism, god worship, and so on. It is also admirable that all these qualities are inherent in both of them. Bharathiyar lived following Vivekananda. Both of them were multi-lingual, capable of making revolutions, had the power to finish what they intended, strived for the liberation of the country, and were energetic people like the sun. Vivekananda travelled all over the world; Bharathiyar lived in Tamil Nadu and puducherry. The life of an average person consists of many events, from birth to death. The events that happen in everyone's life do not become history, but the lives of these two great princes are history to be admired forever. This study compares and examines the impact of place, time, family life, and social influence on their lives.

**Keywords:** Bharathiyar, Swami Vivekananda, Worship, Thoughts

## முன்னுரை

பாரதி இல்லறத்தில் இருந்து புரட்சி செய்தவர். விவேகானந்தர் துறவு வாழ்விலிருந்து புரட்சி செய்தவர். இருவரும் கண்ணனையும், காளியையும் தெய்வமாக வழிப்பட்டனர். சமுதாயத்தில் பெரும் புரட்சிக்கு வித்திட்டவர்கள்.

பாரதியார் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் 1882-ம் ஆண்டு திசம்பர் 11-ம் நாளில் பிறந்தார். பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணி செல்லமாக சுப்பையாக என்று அழைக்கப்பட்டார்.

விவேகானந்தர் கல்கத்தாவில் சிமுலியா என்னும் இடத்தில் 1863-ம் ஆண்டு சனவரித் திங்கள் 12-ம் நாள் பிறந்தார். விவேகானந்தரின் பெயர் நரேந்திரன் இவர் பிலே என்றும், தங்களுடைய குலதெய்வப் பெயரான வீரேசுரன் எனவும் பின்பு விவேகானந்தராகவும் அழைக்கப்பட்டார்.

## தமிழ்ப் பற்று

பாரதி ஏழாம் வயதில் இருந்து விரைந்து கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். எட்டயபுரம் மன்னரவையில் அவரது கவித்திறன் போற்றப்பட்டு “பாரதி” என்ற பட்டத்தைத் தனது பதினாரம் வயதில் பெற்றார். பனிரண்டாம் வயதில் திருநெல்வேலி இந்துக்கல்லூரியைச் சார்ந்த உயர்நிலைப்பள்ளியில் ஆங்கில கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறு கல்வி கற்ற ஆண்டை இருண்ட ஆண்டு என்று

கூறுகிறார் பாரதியார். "அல்லல் மிக்கதோர் மண்படு கல்வி, அற்பக் கல்வி, மடமைக் கல்வி, ஊனர் கலைத்திறன் என்றெல்லாம் தம் கவிதைகளில் பாடுகிறார்" (Kothandaraman, 1980).

விவேகானந்தர் தம் ஏழாம் வயதில் பண்டித ஈசுவர சந்திர வித்யாசாகர் பள்ளியில் சேர்ந்து பயின்றார். பள்ளி மேல் வகுப்பில் ஆங்கிலம் பயிலும் அவசியம் ஏற்படவே அது அன்னிய மொழி என்று கூறி அம்மொழியைக் கற்க மறுத்துவிட்டார்.

## நாட்டுப்பற்று

பாரதியார், விவேகானந்தர் இருவரும் தம் நாட்டு மக்கள் அந்நிய சக்திகளுக்கு அடிமைப்பட்டு கிடப்பதைக் கண்டு மனம் வாடினர். அதனால் தம் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள் இவைகளின் மூலமாக உறங்கிக் கொண்டிருந்த மக்களை எழுப்பின பெருமை இவர்களைச் சாரும் என்பதில் ஐயமில்லை.

"தாதையர் குருதியிற் சாய்ந்துதாம் மடியினும்

பின்வழி மக்கள் பேணுமா றளிக்கும்

சுதந்திரப் பெரும்போர் ஓர்காற் றொடங்குமேற்

பன்முறை தோற்கும் பான்மைத் தாயினும்

இறுதியில் வெற்றியொ டிலகுதல் திண்ணம்"

1906-ம் ஆண்டு பாரதியாரால் இந்தியா என்ற இதழ் தொடங்கப்பட்டது." இந்தியா" இதழின் வாயிலாக அனல் பறக்கும் அரசியல் கட்டுரைகள் வெளிவந்தன. "இந்தியா" வைக் குறிக்குமிடத்துச் சட்ட வரம்பை மீறி இந்தியா நெருப்பு மழை பொழிந்தது என்பர். (இதழாளர் பாரதி, ப- 23) பாரதி தீவிர தேச பக்தரானார் தம் எண்ணம், சொல், செயல் என எதிலும் தன் நாட்டைப் பற்றிய சிந்தனையே மேலோங்கி காணப்பட்டது.

"எக்காரியம் செய்யும் போதும் அவரது நினைவெல்லாம் தாய் நாட்டின்

பேரிலும் சொல்லெல்லாம் தாய் நாட்டைப் பற்றியும் காளியைப்

பற்றியுமே இருக்கும்"

இந்திய மக்களின் வறுமை விவேகானந்தர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது (Sundaramoorthy, 2005). கடவுளின் பணியாளர் என்று கருதப்படும் சந்நியாசிகளாகிய நாம்

"பாமரமக்களுக்கு என்ன செய்திருக்கிறோம் ஏழைகள்பால் கவலை

கொண்டு அவர்களுக்கு ஏற்றம் அளிப்பதுதான் மதத்தின் முதல் கடமை"

மக்களின் வறுமையைப் போக்குவதற்கு தம் வாழ்க்கைப் பயணத்தையே மாற்றிக் கொண்டார் (Sundaramoorthy, 2005) என்றால் அது மிகையாகாது. ஆன்மிகத்தின் அடிப்படையில் மக்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தை பாலகங்காதர திலகரிடம் வெளிப்படுத்தினார்.

"இந்தியா புத்துயிர் பெற வேண்டுமானால் பாமர மக்கள் மேன்மையடைய நாம் பாடுபட வேண்டும்".

## சமயப்பற்று

பாரதியும் விவேகானந்தரும் இந்து சமயத்தில் நாட்டம் கொண்டிருந்தனர். மேலும் மூட பழக்க வழக்கங்களை எதிர்த்தும் அதில் உழன்று கிடப்பவர்களைச் சாடியும் இவற்றிலிருந்து விலகி சான்றோர்களாக வாழ்ந்து காட்டியவர்கள். இந்தியா ஒரு பழம்பெரு பூமி இதில் பல சமயங்கள் பின்பற்றப்பட்டாலும் இந்து மதத்திற்கெனத் தனிச்சிறப்புண்டு என்பதை இருவரும் உணர்ந்திருந்தனர்.

“நம் நாட்டிலுள்ள ஜனங்கள் தங்களுடைய உயிர் நிலையைத் தாங்கள் கொண்ட

மதத்திலே வைத்திருக்கின்றனர்”.

இந்தியா பல சமயங்களின் அருங்காட்சியகமாக விளங்குகிறது (Sundaramoorthy, 2005). இந்து, முஸ்லீம், கிருத்துவம், பௌத்தம் என பிற சமயங்கள் இருந்தாலும் அவரவர் மதத்தில் கொண்டுள்ள இறை நம்பிக்கை, பழக்க வழக்கங்களில் மற்ற சமயத்தினரைப் பாதிக்காத வகையில் சகோதர உணர்வுடனும், அன்புடனும் வாழ்ந்து வருகிறார்கள் என்று பாரதியார் கூறுகிறார். இதே கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் சுவாமி விவேகானந்தர் கலிபோர்னியாவில் ஆற்றிய சொற்பொழிவு அமைந்துள்ளது.

“இந்தியர்கள் தங்கள் சமயங்களையும் சங்கங்களையும் மாற்றுவார்களேயானால்

இந்திய நாடே இருக்காது. ஏனெனில் அந்த இனத்தாரின் உயிர்நாடியே சமயம்தான்.

இதுநாள் வரை யாரும் தொட்டுத் தீண்டாததால் அது வாழ்ந்து கொண்டிருக்கிறது”

சக்தி வழிபாட்டில் இருவரும் பெரிதும் ஈடுபட்டிருந்தனர் விவேகானந்தரின் கவிதைகளில் ஆன்மிகக் கருத்துக்கள் ஓரளவில் தான் காணப்படுகின்றது (Mani, 1971). ஆனால் பாரதியின் கவிதைகளில் சக்திக்கென தனிச்சிறப்பினை அளித்துள்ளார். என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும்.

“அன்னை காளி” என்னும் கவிதையில் விவேகானந்தர் சக்தியை பலவாறு வர்ணனை செய்திருப்பதை பறைசாற்றும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

“இருள்நிறம் காட்டிக் கறைபடுத்தும்

இறப்பின் நிழல்கள் ஆயிரமாய்ப்

பெருகிப் பிணிகள் கவலைகளைப்

பெரிதாய் எங்கும் விரிந்திருக்க

தாயே வருக ஆனந்தத்

தாண்டவம் ஆடி நீ வருக

தாயே உன்பெயர் பயங்கரியாம்

சாவே நீவிடும் மூச்சதுவாம்”

இப்பாடல் மூலம் காளியின் மீது கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்தியுள்ளார் (Mani, 1971).

பாரதி பாடிய “ஊழிக் கூத்து” என்னும் பாட்டில் காளியைப் பல நிலைகளில் வைத்துப் பாடியிருப்பது இருவரும் பக்தி பரவச நிலையில் ஒற்றுமையுடையவர்கள் என்பது தெரியவருகிறது.

## உதவிக்கரம் நீட்டியவர்கள்

1898-ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் கல்கத்தா நகரத்தில் பிளேக் என்னும் நோய் பரவி மக்களைத் துன்புறுத்தியது. பலர் அந்நோயால் இறந்தனர். மீதமுள்ள மக்கள் தம் உடைமைகளை விட்டு உயிர் பிழைத்தால் போதும் என்று கருதி அந்நகரை விட்டு வேறு சில இடங்களை நோக்கி தஞ்சம் புகுந்தனர். இதனால் பசியும், பஞ்சமும் நிலவியது. மக்கள் வறுமையின் கோரப் பிணியில் சிக்கினர். இச்செய்தியை அறிந்த விவேகானந்தர் இமயமலையில் இருந்து உடனே புறப்பட்டு வந்தார். அவர் தம் ஆசிரமத்துறவிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் சென்றார். அப்போது ஒரு பெரிய மைதானத்தை வாடகைக்கு எடுத்து முகாம்களை அமைத்து மக்கள் வசித்து வரும் ஒரு பகுதியில் அவரும் வாழ்ந்து வந்தார். அப்போது அவர் கூறியதாவது,

“அவசியமாயின் (அதை தம் மடத்து நிலத்தை) விற்றுவிடுங்கள் நாம் சந்நியாசிகள்

மரங்களின் கீழ் தங்கி அன்றாடம் பிச்சை எடுத்து காலட்சேபம் செய்வதற்குத்

தயாராக இருக்க வேண்டியவர்கள்”

என்று பெருந்தன்மை மனப்பான்மைக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையில் கூறினார் (Mani, 1971).1917-ம் ஆண்டு புதுவையில் புயலும், மழையும் சேர்ந்து பெரும் துயரினை மக்களுக்கு ஏற்படுத்தியது. மக்கள் வீடுகளை இழந்து வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். உண்ண உணவின்றி வாடினர். மரங்களும், மின்கம்பங்களும் ஆங்காங்கே சாய்ந்து அச்சத்தை ஏற்படுத்தியது. குழந்தை, பெரியவர்கள் என அனைவரும் உடுத்த உடையின்றி அரைகுறை நிர்வாணமாய் காட்சியளித்தனர். அங்கு பாரதியார் சென்றார் அவரைக் கண்டதும் மக்கள் ஓடி வந்து அவர் காலில் விழுந்து புலம்பி அழுதனர்.

பாரதியார் தம் புதுவைச் சீடர்களை அழைத்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். அப்போது பிறபகுதி மக்களிடம் இருந்து உதவிப் பெற்று வருமாறு தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அவ்வாறு பெறப்பட்ட அரிசி, பருப்புக்கொண்டு சேரி மக்களுக்கு கஞ்சி வழங்கப்பட்டது. இடிந்த குடிசைகள் சரிசெய்யப்பட்டது. அம்மக்கள் பாரதியாரை நன்றி உணர்வுடன் கையெடுத்துக் கும்பிட்டனர். அன்றைய புதுவை அரசு பாரதியாரின் இந்த உதவியைப் பாராட்டி அவரது அரியப் பணியை எழுத்துப் பூர்வமாகப் பதிவு செய்தது (Mani, 1971).

## இறுதிக்காலம்

பாரதி, விவேகானந்தர் இருவரும் வாழ்வின் இறுதிப்பகுதியை ஆன்மிகத்தில் ஈடுபடுத்திக்கொண்டனர். இறைச்சிந்தனை உணர்வுடன் சமயம் சார்ந்தவற்றையே சிந்தித்தும், எழுதியும், பேசியும் வந்தனர்.

விவேகானந்தர் கடைசி இரு மாதங்களில் மடத்து விவகாரங்களில் இருந்து விலகி தியானத்தில் மனதைக் கொண்டு சென்றார்.

“மகத்தான தவமும் தியானமும் என்னை ஆட்கொண்டு விட்டன

மரணத்திற்கு நான் ஆயத்தமாகி வருகிறேன்”

பாரதியார் அரசியல் பத்திரிகை போன்றவற்றில் இருந்து விலகிக் காணப்பட்டார் (Mani, 1971). ஆழ்வார் பாடல்களில் ஈடுபாடு கொண்டும், திருநாமம் தரித்துக்கொண்டும் பழுத்த ஞானி போல இருந்தார். என்று ப. கோதண்டராமன் குறிப்பிடுவார்.

1921-ம் ஆண்டு ஆகஸ்டு முதல் வாரத்தில் பாரதி இறப்பதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பு ஈரோடு கருங்கல்பாளையத்து நூல் நிலையத்தில் “மனிதனுக்கு மரணமில்லை” என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

## இறப்பு

சென்னை திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோயிலில் இருக்கும் யானைக்குப் பழம் கொடுப்பதைப் பழக்கமாக வைத்திருந்தார். அன்று பழம் கொடுக்க யானையிடம் நெருங்கினார். அப்போது மதம் பிடித்திருந்த யானை பாரதியைத் தூக்கி எறிந்தது. காலடியில் கிடந்த பாரதியை குவளைக்கண்ணன் காப்பாற்றினார். அதிலிருந்து கடும் பிணியால் வருந்திய பாரதி 1921-ம் ஆண்டு செப்டம்பர் 12 காலை 1.30 மணிக்கு விண்ணுலகம் சென்றார். 39 வயது முடிவதற்கு முன்பே பாரதியின் வாழ்வு முடிந்தது.

ஓய்வற்றப் பயணம், பணிகள் இவற்றால் விவேகானந்தரின் உடல்நலம் குன்றிவந்தது 1902 சூலை 4-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை வழிபாடு நடந்து கொண்டிருந்தது. அவர் தியானத்தில் அமர்ந்திருப்பது போலவே இயற்கை எய்தினார். அப்போது அவருக்கு வயது 39 ஆகும்.

ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்று விவேகானந்தர் கருதினார். உழைப்பிலேயே உயிரைவிடத் தாம் விரும்புவதாகச் சீடரிடம் கூறியது உறுதியாயிற்று.

## முடிவுரை

பாரதி, விவேகானந்தர் இருவரும் ஒரே எண்ணத்துடன் செயல்பட்டவர்கள். தம் தாய் நாட்டின் விடுதலை, தெய்வ பக்தி, மொழிப் பற்று, நாட்டுப் பற்று, தொண்டு போன்றவற்றில் பெயரளவில் இல்லாமல், செயலில் செய்துக் காட்டியப் புரட்சியாளர்கள். இவர்கள் வாழ்வில் மட்டுமல்லாது இறப்பிலும் ஒத்த வயதுடையவர்கள். இந்திய நாட்டின் விடுதலைக்கு பாரத அன்னை பெற்றெடுத்த தவப்புதல்வர்கள் ஆவார்கள். பாரதியின் இந்த நூற்றாண்டு மட்டுமல்லாது இன்னும் ஒரு கோடி ஆண்டுகள் ஆனாலும் இவர்கள் புகழ் இந்த மண்ணை விட்டு நீங்காது. வாழ்க பாரதி சமுதாயம்.

## References

Kothandaraman, P., (1980) Puduvaiyel Bharathi, Palaniyappa Brothers, Chennai, India.

Mani, P.S., (1971) Bharathiyum Ramakrishnar Iyakkamum, Poongudi Pathippagam, Chennai, India.

Sundaramoorthy, (2005) Bharathiar Kavithaikal, Paavai Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License